நேரு இந்தியா

பிப்ரவரி, 1930

JL
Y31ம2, N26
N30.5.2
149391

# சர்குலர்

OFFICE OF THE REGISTRAR
7 MAR 1930
MADRAS

இதனால் சகலமான பாரஸ்ட் பஞ்சாயத்து பிரசிடெண்ட்களுக்கும் தெரிவிப்பதாவது:—

தங்கள் பஞ்சாயத்திலிருந்து "ரூரல் இந்தியா" சந்தாவின் பாக்கியை ஒவ்வொரு மாதமும் அறிவிப்பின் மூலியமாய் தங்களுக்குத் தெரிவித்தும் தாங்கள் ௸ தொகையை நாளது வரையில் அனுப்ப வில்லை. நம்முடைய இயக்கத்தின் முன்னேற்றத்தை வேண்டி இப்பத்திரிகை ரொம்பவும் அவசியம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஆகையால் தாங்கள் இனி காலதாமதம் செய்யாமல் ௸ தொகையை சீக்கிரத்தில் அனுப்பி விடவும்.

தங்கள் பஞ்சாயத்திற்கு நமது யூனியனில் டிபாசிட் தொகை பாக்கியிருந்தால் அறிவிப்பில் கண்ட சந்தா பாக்கியை ௸ டிபாசிட் தொகையிலிருந்து ஈடு செய்து வரவு வைத்துக் கொள்ளும்படிக்கு தங்கள் பஞ்சாயத்தில் ஒரு மீடிங் கூடி தீர்மானம் போட்டு தீர்மானத்தின் நகலுடன் மார்ச்சு மாதம் 20 தேதிக்குள் நமது யூனியன் ஆபிசிற்கு அனுப்பவும். அப்படிக்கு ௸ தேதிக்குள் தீர்மானம் போட்டு வராவிடில் நாங்களே தங்களுடைய சந்தா பாக்கிக்கு அட்ஜஸ்ட் செய்து கொள்வோம் என்பதை அறியவும்.

இப்படிக்கு

**A.** இராஜ கோபால ரெட்டி,
பிரசிடெண்ட், பாரஸ்ட் பஞ்சாயத்தார்கள் யூனியன் லிமிடெட்,

மைலாப்பூர்
மதராஸ்,
20-2-30

# இராம அபிவிருத்தி (ரூரல் இந்தியா) பஞ்சாங்கம்

| பிப்ரவரி மார்ச்சு | மாசி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 12 | 1 | பு | Oசசி 28-18 | பூசம 22-38 | சி 60 | களஞ்சியம் வைக்க |
| 13 | 2 | வி | பௌ 18-58 | ஆயி 14-8 | சி14-8அ | நவகிரஹ சாந்திசெய் |
| 14 | 3 | வெ | பிர 9-58 | மக 6-58 | அ6-58சி | வாகனமேற, விதை |
| 15 | 4 | ச | து 2-3 / திரு 55-23 | பூரம் 0-43 / உத் 55-58 | சி0-43ம | |
| 16 | 5 | ஞா | சது 50-30 | அஸ் 52-38 | அ53சி | |
| 17 | 6 | தி | ப 47-28 | சித் 51-28 | பி52அ | |
| 18 | 7 | செ | ஷ 46-38 | சுவா 52-30 | சி53ம | |
| 19 | 8 | ட | ச 47-55 | விசா 55-28 | சி60 | |
| 20 | 9 | வி | அ 51-10 | அனு 60-0 | சி60 | |
| 21 | 10 | வெ | ந 55-58 | அனு 0-15 | சி 0-15ப | |
| 22 | 11 | ச | த 60 0 | கே 6-28 | சி60 | கிணறு வெட்ட |
| 23 | 12 | ஞா | த 1-48 | மூ 13-35 | அ36சி | விவாகம் புபஸவனம் |
| 24 | 13 | தி | ஏகா 8-8 | பூரா 21-3 | ம60 | சாவ, மத்வ ஏகாதசி |
| 25 | 14 | செ | துவா 14-38 | உத்ரா 28-38 | சி28-38 | |
| 26 | 15 | பு | திர 20-45 | திரு 35-40 | சி35-50 | மகா சிவ ராத்திரி |
| 27 | 16 | வி | சசி 26-30 | அவி 42-30 | சி43ம | மாடுவாங்க |
| 28 | 17 | வெ | ● அ 31-25 | சத 48-38 | சி60 | சர்வ அமாவாஸை |
| 1 | 18 | ச | பிர 35-28 | பூரட் 53-45 | ம54சி | பல்குன சுத்தம் |
| 2 | 19 | ஞா | து 38-48 | உத்ரட் 58-13 | அ60 | சந்திர தரிசனம் |
| 3 | 20 | தி | திரு 41-13 | ரே 60-0 | சி60 | விவாஹம், சீமந்தம் |
| 4 | 21 | செ | சது 42-35 | ரே 1-43 | சி60 | ம ச சதுர்த்தி |
| 5 | 22 | பு | ப 42-40 | அஸ் 4-10 | ம4-10சி | மூலிகை உபயோகிக்க |
| 6 | 23 | வி | ஷ 41-40 | பர * 5-28 | சி5-28ம | கடன் தீர்க்க மாடு |
| 7 | 24 | வெ | ச 39-20 | கிரு 5-33 | சி5-33ம | வாங்க |
| 8 | 25 | ச | அ 35-35 | ரோ 4-13 | அ4-13 | களஞ்சியம் வைக்க |
| 9 | 26 | ஞா | ந 30-30 | மிரு 1-38 / திரு 57-45 | சி60 | கதிரறுக்க |
| 10 | 27 | தி | தச 24-5 | புன 52-43 | அ53 சி | யாத்திரை செய்ய |
| 11 | 28 | செ | ஏகா 16-58 | பூசம் 47-3 | சி60 | எருவிட |
| 12 | 29 | பு | து 9-8 | ஆயி 40-28 | சி60 | |
| 13 | 30 | வி | திர 1 சசி 53 | மக 34-33 | அ35சி | களஞ்சியம் வைக்க |

## இராகுகாலம் முதலியன.

[சூரியன் உதயம் 6 மணிக்கு ஆகும் நாட்களுக்கு]

| வாரங்கள் | இராகு காலம் | குளிகை காலம் | எமகண்டம். |
|---|---|---|---|
| ஞாயிறு | மாலை 4½—6 | மாலை 3—4½ | மாலை 12—1 |
| திங்கள் | காலை 7½—9 | மாலை 1½—3 | காலை 10½—1 |
| செவ்வாய் | மாலை 3—4½ | மாலை 12—1½ | காலை 9—10½ |
| புதன் | மாலை 12—1½ | காலை 10½—12 | காலை 7½—9 |
| வியாழன் | மாலை 1½—3 | காலை 9—10½ | காலை 6—7½ |
| வெள்ளி | காலை 10½—12 | மாலை 7½—9 | மாலை 3—4½ |
| சனி | காலை 9—10½ | காலை 6—7½ | மாலை 1½—3 |


## 1895-ம் ௵ ஸ்தாபிக்கப் பட்டது

## பழமையான கரூர் ரத்ன வியாபாரிகள்.

நாம் வைரங்கள் முதலியன விற்கும் போதே "காரண்டீ" செய்கிறோம். இஷ்டமிராவிடில் சரக்குகளை மாற்றிக்கொள்ளவாவது திருப்பி பணம் பெற்றுக்கொள்ளவாவது செய்யலாம்.

எங்களுடைய உத்திரவாதமே உங்களுக்கு ஒரு பொருப்பாகும். நீங்கள் நம்மிடம் தபால் மூலமாகவும் வியாபாரம் செய்யலாம்.

நம்முடைய வெள்ளி தினுசுகள் சுத்த வெள்ளியினால் கையினால் செய்யப்பட்டவை. அவைகள் கனமாகவும், கண்ணியமாகவும் நூதன தினுசுகளாகவுமிருக்கும்.

இந்த வியாபாரத்தில் எங்களுக்கு 35 வருஷங்களுக்கு மேல் நல்ல அனுபவமுண்டு.

ஆதலால் நம்முடைய அனுபவத்தால் நீங்கள் லாபமடைய இதுவே நல்ல தருணம்.

## ஸ்வாராஜ்மல் லல்லுபாய் அண்டு கோ,

வைர, ரத்ன, வெள்ளி தங்க வியாபாரிகள்.

313, எஸ்பிளனேட். மதராஸ்.

## தி யுனைடெட் நாஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்:

தலைமை ஆபீசு: கராச்சி.

நீங்கள், பால்யமானல்,
உங்களுக்கு தகுதியான வேலை நம்மிடம் கிடைக்கும்.

நீங்கள் வயோதிகரானல்,
நம்மிட கம்பெனியின் ஏஜெண்டாக நீங்கள் வேலை செய்யலாம் அப்படிச் செய்தால் உங்களுக்கு தக்க ப்ரதிபலன் கிடைப்பதோடு, உங்களுக்கு அது மெத்த திருப்தியையும் சந்தோஷத்தையும் கொடுக்கும்.
அரையணு செலவு செய்து முழுவிவரம் கேளுங்கள்.

நாம் கொடுப்பவை:—

(1) குறைந்த செலவில் புதுமையான பாலிஸிகள்.
(2) வயதானவர்களுக்கு தக்க வருமானம்.
(3) வெளியில் நமது ஏஜண்டாக வேலை செய்பவர்களுக்குள் ஒருவருக்கு நமது கம்பெனியின் மேல்பார்வை கமிட்டியில் ஒரு ஸ்தானம்.

மற்ற விவரங்கட்கு விலாஸம்:—

மானேஜிங் ஏஜண்டுகள்,
யுனைடெட் நாஷனல் இன்ஷூ-
ரென்ஸ் கம்பெனி லிமிடெட்,
ட்ரீட ரோட், கராச்சி.



### சுகாதார பாடங்கள்.

I, II, III வது பாரங்களுக்கு (விலை முறையே, 6 அணு, 4 அணு, 6 அணு) வீரவநல்லூர், ஸெகண்டரி பாடசாலை ஆசிரியர் எம். எஸ். சுப்பிரமணியன் எழுதியவை.

தமிழ்நாடு "சிறு சிறு பாடங்களாக பல படங்களுடன் ஆசிரியர் சுகாதாரமுறைகளைத் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்"

ஆரோக்கிய தீபிகை "சுலப நடையில் சிறுவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளும் படி எழுதப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு எலிமெண்டரி பாடசாலைகளிலும் இவைகளைப் பாட புத்தகங்களாக வைப்பார்களென்று நம்புகிறோம்".

ஊழியன் "பள்ளி மாணவர் மட்டுமன்று; பிறரும் படித்துப் பெரும் பயனடையத் தக்கவை".

புத்தகங்கள் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

மைலாப்பூர், மாரி செட்டி வீதி 2 கெ வீடு. K. S. M. சர்மா விடமும் கிடைக்கும்.





**ரப்பர் ஸ்டாம்புகள்.**
பதக்கங்கள் பரிசு பெற்றவை
குறைந்த தொகை — — — இருந்த
வேண்டியாடு திருப்தியைத் தர்விக்கும்.
இன்றேல் பணம் வாபீஸ்.
கேடலாக் இனாம்.
மதராஸ் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி,
தபால் பெட்டி 74. மதராஸ்.



**RUBBER-STAMPS**
— AWARDED MEDALS —
LOWEST PRICES — BEST QUALITY
SATISFACTION GUARANTEED
OR YOUR MONEY BACK.
CATALOGUE FREE.
The Madras Rubber Stamp Mfg. Co.
POST BOX 74. MADRAS.



**రబ్బరు స్టాంపులు.**
[illegible]
దీ. మద్రాసు రబ్బరు స్టాంపు [illegible]
[illegible] పెట్టె 74, [illegible]



# SADHANA
# AUSADHALAYA
## DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஒளஷதங்கள் கிடைக்கும். வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தை தெரிவித்தால் இனமாக மருந்துபட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம் (சுவர்ணஸிந்தூரம்)

அசல் தங்கத்துடன் ஒருசேர் ... ரூ 4 0 0

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து, பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்தசுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸரஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி

இது வீர்யக்குறைவு, அபோகத்தன்மை, சுவப்னஸ்கிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்புநோய் முதுகுவலி கர்ப்பபை வியாதி, அகாலமாதவிடாய் முதலிய கொடும்வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2      50 டோஸ் ரூ 5

நேர்த்தியான காயிதத்தில் குறைந்த சந்தாவில்

நல்ல பத்திரிகை! நவீன பத்திரிகை!!

## " தமிழ் நாட்டு மாடென் ரெவியூ "

என்று பல பத்திரிகைகளாலும் அறிஞர்களாலும்
புகழ்பெற்ற உயர்ந்த மாதப் பத்திரிகை!!!

# "பாரதி"

ஆசிரியர்:— ரா. நாராயணஸ்வாமி அவர்கள்

வருட சந்தா ரூ 2. அயல் நாடுகளுக்கு ரூ 2-8-0 அல்லது 4 ஷில்லிங்.

மனேஜர், "பாரதி" ஆலயம்,
உத்தம பாளையம், தென்னிந்தியா.

---

# கலைமகள்

(ஓர் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை)

அன்பின் மிக்க சகோதர சகோதரிகாள்!

தேச நலத்தையும், மதாபிவிருத்தியையும், பாஷாபிமானத்தையும் கருதியுழைக்கும் தேசிய மணம் கமழும் சிறந்த மாதப் பத்திரிகை இதுவொன்றே.

சந்தா விபரம்: ஒரு வருடத்திற்கு தபால் செலவுடன் இந்தியா, பர்மா சிலோன் முதலிய விடங்கட்கு அணா-12 பிறைக்கு, சிங்கப்பூர் முதலிய விடங்கட்கு ரூ 1. தனிக்காப்பி 1-க்கு அணா 0-1-6

மானேஜர்:- "கலைமகள்" ஆபீஸ்,
64. முல்லாசாயபு வீதி, சௌகார்பேட்டை, சென்னை.

---

## கர்ம பாலன்

பிரதி தமிழ் மாதக் கடைசியில் வெளிவரும் சிறந்த தமிழ்ப்பத்திரிகை பத்திராதிபர்:— ஸ்ரீ ஆர். வேங்கடசாமி நாயுடு: வருடசந்தா தபாற்செலவுட்பட ரூபா ஒன்றுதான். விளம்பரவிகிதத்திற்கு மானேஜருக் கெழுதுங்கள், மாதிரிக்காப்பி இலவசம், இன்றே எழுதுக. மானேஜர், கம்மபாலன் ஆபீஸ்: திருத்தங்கல் Po. இராமநாதபுரம் ஜில்லா, (Ramnad Dist)

---

# இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும் முறை, கால்நடை பரிபாலனம். கூட்டுறவு கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள் முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர். இந்திய விவசாயம் ஆபீஸ்;
தெப்பக்குளம் போஸ்ட்; திருச்சிறாப்பள்ளி.

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—ஏ. ஸ்வாமிநாதய்யர், ரிடயர்ட் டிப்டி கலெக்டர்.

ஆபீஸ்: மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் V | 1930௵ பிப்ரவரி௴ | நெ. 2.


## பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளைப் பற்றிய கவர்மெண்டு விதிகள்.

சட்ட சபையில் நடந்த விவாதத்திற் கிணங்கி, கவர்மெண்டார் பஞ்சாயத்துகள் நடவடிக்கைகளை நடத்த வேண்டிய வழியில் விதிகளை நிர்ணயிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். ரெவினியூ போர்டார், தற்போது, பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் சம்பந்தமாக விருக்கிற பல கவர்மெண்டு ஆர்டர்களையும், போர்டு புரோஸீடிங்குகளையும் திரட்டி, அவைகளோடு, சிற்சில புது விதிகளையும் சேர்த்து, ஒரு ஸ்டாண்டிங்கு ஆர்டரைத் தயார் செய்து, அதை கவர்மெண்டாரின் அங்கீகாரத்திற்கு அனுப்பினார்கள். சில மாதங்களுக்கு முன், நமது பாரெஸ்டுப் பஞ்சாயத்தார் ஸங்கத்தின் தலைவரும், சிறந்த தேசாபிமானியுமாகிய திவான் பஹதூர் பி. முனிஸாமி நாயுடுகாருவும், நமது பஞ்சாயத்தார் யூனியனின் பிரெஸிடெண்டாகிய ம-ா-ா-ஸ்ரீ ஏ. இராஜகோபால ரெட்டிகாருவும், "ரூரல் இந்தியா" ஆசிரியராகிய ரிடையர்டு டிப்டி கலெக்டர் ம-ா-ா-ஸ்ரீ ஏ. சுவாமிநாத ஐயர் அவர்களும் கவர்மெண்டின் பாரெஸ்டு பஞ்சாயத்து விஷய மெம்பரை பேட்டி கண்டு, குறைகளைக் கூறியதின் பேரில், கவர்மெண்டார் மேற்கூறிய ஸ்டாண்டிங்கு ஆர்டரை ஒரு கம்மிட்டியின் ஆலோசனைக்கு அனுப்பி யிருக்கிறார்கள். அக்கம்மிட்டிக்கு, ரெவினியு போர்டில் பாரெஸ்டு பஞ்சாயத்து விஷய மெம்பராயிருக்கும் மிஸ்டர் எச். ஏ. பி. வெர்னன், தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார். பாரெஸ்டு பஞ்சாயத்து ஆபீசர் அவர்கள் அதற்குக் காரிய தரிசியாக நியமிக்கப் பட்டிருக்கிறார். திவான் பஹதூர் முனிசாமி நாயுடுகாருவும், மாஜிமந்திரியாகிய ம-ா-ா-ஸ்ரீ. ஏ. அரங்கநாத முதலியார் அவர்களும், செங்கல்பட்டு ஜில்லா

வேண்டிய போதெல்லாமும் தங்களுடைய பணங்களை திரும்பி வாங்கிக் கொள்ள சௌகரியமும் யூனியனில் இருந்து வருகிறது. யூனியன் ரிஜிஸ்டராய் விட்டது. கணக்குகள் ஸெர்டிபைட் ஆடிட்டரால் பரிசோதிக்கப் பட்டு ஒழுங்காக விருக்கின்றன வென்றும், பண சம்பந்தமாக, மோசம் நாசம் ஒன்றும் ஏற்படவில்லை யென்றும் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. நமது பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் பணங்கள் நமது யூனியனில்தான் வைக்கப் பட வேண்டும். யூனியனை வலுக்கச் செய்ய வேண்டியது ஒவ்வொரு பாரெஸ்டு பஞ்சாயத்தாருடையவும் முக்கிய முதல் நோக்கமாக விருக்க வேண்டும். அதை அபிவிருத்தி செய்ய வேண்டியது வெகு முக்கியமான விஷயம். யூனியனை கலைக்கக்கூடாது. யூனியன் கலைந்தால், பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கமே அழிந்து போய் விடு மென்பதில் சந்தேக மில்லை.

பத்திரிகையை மேல் மேலும் அபிவிருத்தி செய்யலாம். கவர்மெண்டார், கிராமப் பஞ்சாயத்து புல்லடீனை, நிறுத்திவிடப் போகிறார்களாம். நமது பத்திரிகையில், கிராமப் பஞ்சாயத்து புல்லடீன் விஷயங்களும், பிரசுரிக்கப் படலாம். மேற்கூறிய புல்லடீன் சம்பந்தமாக, கவர்மெண்டாருக்கு அதிக பணச் சிலவு இருந்திருக்கிறது. நமக்கு அவர்கள் கொஞ்சம் பண ஒத்தாசை. யைச் செய்து கிராமப் பஞ்சாயத்துகளை நமது பத்திரிகைக்கு சந்தா சேரும் படி கட்டாயப் படுத்தினால், நாம் வெகு நன்றாய் நமது பத்திரிகையை அபிவிருத்தி செய்து அதிலிருந்து விசேஷ லாபத்தை அடையக்கூடும். பத்திராதிபர் பத்திரிகையின் அபிவிருத்தி சம்பந்தமாகப் பல யோசனைகளைக் கொண்டிருக்கிறார். அவைகளை அநுஷ்டானத்தில் கொண்டு வர வேண்டுமானால் மேற்கூறிய ஏற்பாடு வெகு சாதகமாக விருக்கும்.

கம்மிட்டியார் ஆலோசிக்க வேண்டிய விஷயங்களில் முக்கியமானது பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு சட்டபூர்வமான அந்தஸ்து ஏற்பட வேண்டிய விஷயம். தற்போதில் பாரெஸ்டு பஞ்சாயத்து என்றால் கிராமக் காடுகளின் குத்தகைக்காரர் என்றே வழங்குகிறது. அதற்குத்தக்க கைக்காரர்கள் என்கிற அர்த்தமும் சரியாக ஏற்படவில்லை. ஏனென்றால் குத்தகைக்காரர்களாயிருந்தால் அவர்களே சர்க்காருக்கு குத்தகைப்பணங்களைச் செலுத்தின பின்பு மீதி பணங்களை அவர்கள் எடுத்துக் கொள்ளலாமே; அல்லது அவர்கள் இஷ்டம் போல் சிலவு செய்துகொள்ளலாமே. ஆகவே, பாரெஸ்டு பஞ்சாயத்துகள் குத்தகைக்காரர்களல்ல. அவர்கள் கிராமசமூகங்களின் பிரதிநிதிகளாயிருக்கிறார்கள். பண்டை காலம் போல் கிராம சமூகங்கள் பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் மூலமாக கிராமக்காடுகளைப் பரிபாலித்து கவர்மெண்டுக்குத் தீர்வைகளைச் செலுத்துகின்றன. கவர்மெண்டார் குத்தகை கெடுக்களை 25, 30 வருஷங்களாகச் செய்து தீர்வைகளைக் குறைத்து அவைகளை நிர்ணயித்து பஞ்சாயத்துகளுக்கு சட்டபூர்வமான அந்தஸ்தை ஏன் ஏற்படுத்தக் கூடாதோ தெரிய



வில்லை. பஞ்சாயத்தார்களை இலெக்ஷன் செய்வதில் பல சீர்கேடுகளிருக்கின்றன. கிராம ஜனங்கள் எல்லோரும் சேர்ந்து பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும், எல்லா ஜாதியர்களும், மாட்டுச்சொந்தக்காரர்களும், தாழ்ந்த வகுப்பினர்களும் பஞ்சாயத்துகளில் அங்கத்தினர்களாக விருக்க வேண்டும். டிப்டி தாசில்தார்கள் இலெக்ஷன்களில் சம்பந்தப்படக்கூடாது. பஞ்சாயத்துகளுக்கெல்லாம் கம்பவுண்டிங்கு அதிகாரம் கொடுக்கப் பட வேண்டும். கம்பவுண்டிங்கு பணங்களை பஞ்சாயத்துகளே எடுத்துக் கொள்ள வேண்டும். அபிவிருத்திமுயர்ச்சிகளை நடத்துவதற்கு பஞ்சாயத்துகளுக்குப் போதுமான பணங்களிருக்க வேண்டும். கண்டிஞ்சண்டு சிலவுக்காக வருஷம் ஒன்றுக்கு 12 ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரையில் பஞ்சாயத்திற்குத் தக்கபடி திட்டம் ஸ்டாண்டிங்கு ஆர்டரில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதாம். மேற்கூறிய திட்டம் சரியானதல்ல. பஞ்சாயத்துகளுக்குப் பல வகையில் சிலவுகளிருப்பதாலும், மாஹாண யூனியனுக்கும், மாஹாண சங்கத்திற்கும் அவைகள் சிலவு விகிதங்களைக் கொடுக்க வேண்டியிருப்பதாலும், "ரூரல் இந்தியா" பத்திரிகைக்குச் சந்தா செலுத்த வேண்டியதாக விருப்பதாலும், மாஹாணக் கன்பரன்சு சிலவு விஷயமாய்ப் பண உதவி செய்யவேண்டியதாக விருப்பதாலும், கன்பரன்சுக்குப்போகிற பிரதிநிதியின் பிரயாணச் சிலவுகளைக் கொடுக்க வேண்டியதாக விருப்பதாலும் குறைந்ததாக ரூபாய் 50ஐ யாவது கண்டின்ஜண்டு சிலவு திட்டமாக கவர்மெண்டார் ஏற்படுத்த வேண்டுமென்று கோறுகிறோம்.

பஞ்சாயத்துக் காடுகளில் மேய்ச்சல் விகிதங்கள் கிராம ஜனங்களால் பரிக்க முடியாதவைகளாக விருக்கின்றன வென்று எல்லா ஊர்களிலும் கூக்குற லிட்டுக்கொண் டிருக்கிறார்கள். மேய்ச்சல் விகிதங்கள் குறைக்கப்பட வேண்டும். பஞ்சாயத்துகள் சினைக்காளைகளை வாங்கி வளர்க்கவேண்டும் அப்படிச் செய்வதற்கு அவர்களுக்கு பணமில்லாமல் போகிறது. கிராமங்களில் அபிவிருத்தி முயர்ச்சிகளைக் கைக்கொள்ளவும் தாழ்ந்த வகுப்பினர்களுக்குப் பணஉதவி, நிலஉதவி செய்யவும் பஞ்சாயத்துகளுக்கு பணமும், அதிகாரமும் இருக்கவேண்டும். கவர்மெண்டார் பாரெஸ்டு விஷயமாகக் குறைகளைக் கண்டறிந்து தங்களுக்குத் தெரிவிக்கும்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு கமிட்டியை ஏற்படுத்துவதாக சட்டசபையில் மொழிந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வாக்குறுதிகளை இன்னமும் நிறைவேற்றவே யில்லை.

இன்னும் பற்பல விஷயங்களிருக்கின்றன. கமிட்டியாரும் கவர்மெண்டும் ஸ்டாண்டிங்கு ஆர்டர் சம்பந்தமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் தக்க நபர்களை விசாரித்து அவர்களுடைய அபிப்பிராயங்களையும், யோசனைகளையும் அடையவேண்டும். காலதாமதத்தைக் கவனிக்கவே கூடாது. தீர்காலோசனைகளைச் செய்யவேண்டும். நமது மாஹாணத்தின் க்ஷேமமும் செல்வ நிலையும்

கிருமக்காடுகளின் நிலைமையையே பொறுத்திருக்கின்றனவென்பதை எல்லோரும் நினைவில் வைக்கவேண்டும்.

பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் இவ்விஷயமாக ஒரு கன்பரன்ஸை நடத்தி அபிப்பிராயங்களைக் கைக்கொண்டு அவைகளை கவர்மெண்டாருக்குத் தெறிவித்தால் நலம். மார்ச்சு மாதத்திலேயே கான்பரன்ஸை நடத்தலாம். காலதாமதமில்லாமல் அதன் சம்பந்தமான முயர்ச்சிகளை அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

திவான் பஹதூர் பி. முனுசாமி நாயுடு காருவும் ம-ா-ா ஸ்ரீ ஏ. அரங்கநாத முதலியார் அவர்களும் இதர அங்கத்தினர்களும் மேற்கூறிய யோசனைகளை கவனித்துத்தக்க முயர்ச்சிகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

## நமது உணவு

(14-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி)

நம்முடைய சரீரத்தின் பெரும்பாகம் ஜலம். இரத்தத்தின் முக்கால் பாகம் ஜலம். சரீர பாகங்களிலும் இரத்தத்திலுமுள்ள ஜலம்தான் சரீர வளர்ப்பிற்கு வேண்டிய போஷண வஸ்துக்களை ஒவ்வொரு சரீரபாகத்திற்கும் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. அதே ஜலம்தான் சரீரத்தின் பல பாகங்களிலிருந்தும் கழிவு பதார்த்தங்களை அலசிகொண்டுபோய் விடுகிறது. சரீரமானது கண்ணுக்குப் புலப்படாத பல துவாரங்களோடு இருக்கிறது. அது காரணம் பற்றி அது அடிக்கடி உலர்ந்து போகிறது. சர்மத்தின் மூலமாக சரீரநீர் வேர்வையாக வெளியே போகிறது. நம்முடைய சுவாச கோசங்களின் மூலமாகவும் சரீரநீர் வெளியே போகிறது. மூத்திர கோசங்களின் மூலமாகவும் அது வெளியே தள்ளப்படுகிறது, மல விசர்ஜனங்களிலும் அது வெளியே தள்ளப்படுகிறது. ஜலமானது மனித சரீரத்திலுள்ள விஷவஸ்துக்களை அலசி அடித்துக் கொண்டுபோய் வெளியேதள்ளி சரீரத்தை அழுக்கு அசுத்தங்களில்லாமல் வைக்கிறது. இவ்விதமாக சரீரம் ஜலத்தை இழப்பதால் அதற்கு அடிக்கடி புதியஜலம் வேண்டியதாயிருக்கிறது. சரீரத்திற்கு ஜலம் வேண்டியபொழுது நமக்கு தாகம் எடுக்கிறது. அநேக ஜனங்கள் தங்களுடைய சரீரங்களுக்கு வேண்டிய அளவுகளில் நீரைக் குடிக்கிறதில்லை. அக்காரணத்தினல்தான் அவர்கள் திராணியற்றவர்களாக விருக்கிறார்கள். ஜலம் போதாமையால் அவர்களுடைய சரீரங்களில் இரத்தம் தடித்தும், விஷவஸ்துக்கள் நிறைந்துமிருக்கிறது. அவர்களுடைய உணவுகள் சரியாய் ஜீர்ணிக்கப் படுகிறதில்லை அவர்களுடைய குடல்கள் சரியான ஒழுங்குகளில் இருக்கிறதில்லை, அவர்களுடைய சரீரங்கள் அதிக சூடாக விருக்கின்றன, ஒவ்வொருவரும் காலையில் எழுந்தவுடனே ஒரு லோடா



தீர்த்தத்தைக் குடிக்க வேண்டும். போஜன மானபின்பும் 2, 3 தடவை நல்ல குளிர்ந்த தீர்த்தத்தைக் குடிக்கவேண்டும். நாம் சரீரத்தின் வெளிப்புறத்தை ஸ்நானம் செய்வதால் சுத்தி செய்து கொள்வதுபோல சரீர உள் பாகங்களையும் வேண்டிய அளவுகளில் அடிக்கடி நீர் குடித்து சுத்திசெய்து வைத்துக்கொள்ளவும் வேண்டும்.

நாம் குடிக்கும் ஜலம் வெகு சுத்தமாயிருக்கவேண்டும். அதில் அழுக்கு இருக்குமேயானல் நமக்கு நோய்கள் உண்டாகும். சீதபேதி டைபாய்டு ஜுரம் முதலிய கொடிய நோய்கள் அசுத்த ஜல பானத்திலேயே உண்டாகின்றன. நீர் சுத்தமாயில்லாததாகத் தோன்றினல் அதைக் காய்ச்சித்தான் பானம் செய்யவேண்டும். நாம் வீடுகளில் பானநீரை சுத்தமான பாத்திரங்களில் வைத்து அவைகளில் அசுத்தங்கள் அண்டாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். மனிதன் 2, 3 படி நீரை நாளொன்றுக்குக் குடிக்கவேண்டும்.

## ஊன் பதார்த்தங்கள்—(Proteins).

ஊன் பதார்த்தங்கள் சரீரத்தின் வளர்ச்சிக்கு முக்கியமாய் வேண்டிய பொருள்கள். அவைகள் பிசுக்குள்ள பொருள்கள்; தயிர், முட்டையின் வெள்ளை பாகம் முதலியவைகள் ஊன் பதார்த்த வகையைச் சேர்ந்தவைகள். ஊன் பதார்த்தங்களில் நைட்ரோஜன் (உப்பு வாயு) என்கிற வாயு சேர்ந்திருக்கிறது. சரீரம் வளரும் பொழுது கோடியான கோடி புதிய கணங்களுண்டாவதற்கு நைட்ரோஜன் வாயு ஒரு முக்கியமான வஸ்துவாயிருக்கிறது. அந்த வாயுதான் வேலை செய்து வலிவை யிழந்த பழய கணங்களுக்கும் வலுவைக் கொடுக்கிறது.

ஊன் பதார்த்தங்கள் (proteins.) நாம் உணவாகக் கொள்கிற மிருக சரீரங்களிலும் சாகங்களிலும் அமைந்திருக்கின்றன. மிருக சரீரங்களிலுள்ள ஊன் பதார்த்தங்களும், சாகங்களிலுள்ள ஊன் பதார்த்தங்களும் ஒரே விதமாக விருமல் மாறுபாட்டை வஹிக்கின்றன. அப்படிப் போலவே மனித சரீரத்திலுள்ள ஊன் பதார்த்தங்களும இவ்விரண்டு வகைகளிலிருந்தும் பேதப்படுகின்றன. எல்லா ஊன் பதார்த்தங்களும் 18 துண்டுகளை உடைத்தாயிருக்கின்றன. மனித சரீர ஊன் பதார்த்தங்களும், மிருக சரீர ஊன் பதார்த்தங்களும், சாக ஊன் பதார்த்தங்களும் வித்தியாசப் படுவது மேற்கூறிய துண்டுகள் ஒவ்வொன்றில் ஒவ்வொரு விதமாகக் கோர்க்கப்பட்டிருப்பதாலே தான்.

மிருக ஊன் பதார்த்தங்களும் சாக ஊன் பதார்த்தங்களும் மனித சரீர ஊன் பதார்த்தக்களைப் போல் இல்லாமலிருப்பதால் அவைகள் மனித சரீரத்திற்கு உபயோகப் படுவதற்கு முன் அவைகள் அந்தந்த அவயவ வளர்ச்சிக்கு ஏற்ற படி உபயோகப்படும்படி மாற்றப் பட வேண்டியதாயிருக்கின்றன.

நாம் சாப்பிடும் உணவோடு ஊன் பதார்த்தங்கள் இரைப்பையையும் குடலையும் அடைந்த உடனே அவைகளின் கட்டு தளர்ந்து போகிறது. 18 துண்டுகளும் பிரிந்து போகின்றன, பிரிக்கப்பட்ட துண்டுகள் பிறகு தேக உபயோகத்திற் கேற்றபடி கூட்டப்படுகின்றன. தேவையா யில்லாத துண்டுகள் சரீரத்தில் கொழுப்புகளோடும் கஞ்சித் திரவ பதார்த்தங்களோடும் சேர்ந்து தீபனத்தை யுண்டு பண்ணுகிற வழியில் உபயோகப்படுகின்றன. சில உபயோக மில்லாத துண்டுகள் சரீரத்தினுல் கழிக்கவும் படுகின்றன.

நமது உணவுகளில் சில உணவுகள் நமது சரீரம் கஷ்டமில்லாமல் மாத்தி உபயோகிக்கக்கூடிய ஊன் பதார்த்தங்களை யுடைத்தா யிருக்கின்றன. சில உணவுகளிலுள்ள ஊன் பதார்த்தங்களை நமது சரீரம் கொஞ்சம் பிரயாஸப் பட்டுத்தான் தனக்கு வேண்டியபடி மாத்தி உபயோகித்துக் கொள்ளுகிறது. மிருக மாம்ஸ உணவுகளில் ஊன் பதார்த்தங்கள் அதிகமாய் முதலில் சொல்லப்பட்டபடி அமைந்திருக்கின்றன. சாக ஊன் பதார்த்தங்கள் இரண்டாவது வகையைப் பெரும்பாலும் சேர்ந்தவை.

ஆகவே, நமது சரீர வளர்ச்சிக்கு உணவுகள் ஊன் பதார்த்தங்களை அதிகமாக வஹிக்க வேண்டியதுடன் அவ்வூன் பதார்த்தங்களில் பெரும் பாகம் சரீரம் கஷ்டமில்லாமல் உபயோகிக்கும் படியானவைகளாகவும் இருக்க வேண்டும். சுலபமாய் உபயோகிக்கக் கூடியவைகள் உணவுகளில் அதிகமாயிருந்தால் கொஞ்சம் பிரயாஸத்துடன் உபயோகிக்கக் கூடியவைகளை அவைகள் சரீரம் சரியாய் உபயோகிக்கும்படி சாதகப்படுத்தும். சுலபமாய் உபயோகிக்கக் கூடாத ஊன் பதார்த்தங்கள் தள்ளிவிடக் கூடியவைகளே யல்ல. சுலபமாய் உபயோகிக்கக் கூடிய ஊன்பதார்த்தங்கள் உணவுகளில் நிரைந்திருந்தால் அவைகளோடு சுலபமாய் உபயோகிக்க முடியாத ஊன் பதார்த்தங்கள் சம்பந்தப் படுவதால் எல்லாமே சரிவர பயோகப் பட்டுவிடும்

(1) சரீரம் கஷ்டமில்லாமல் உபயோகித்துக் கொள்ளக்கூடிய ஊன் பதார்த்தங்கள் பாலிலும், தயிரிலும், மோரிலும், முட்டைகளிலும், மூத்திர கோசங்களிலும், கல்லீரலிலும், மாம்ஸத்திலும், மீன்களிலும், பச்சைக்கீரைகளிலும் செடிகளின் குருத்துகளிலும் நிறைந்திருக்கின்றன. கோதுமை மாவிலும் அவைகளிருக்கின்றன. ஆனல் கோதுமை மாவில் சுலபமாய் உபயோகிக்க முடியாத ஊன்பதார்த்த வகை அதிகமாயிருக்கிறது.

(2) கொஞ்சம் கஷ்டத்துடன் உபயோகிக்கக் கூடிய வகை கோதுமை மாவிலும், ஓட்மாவிலும், பார்லியிலும், கேழ்வரகிலும், சோளம் கம்பு முதலியவைகளிலும், தீட்டப்படாத அரிசியிலும், பட்டாணி, பருப்பு, கொள்ளு, உருளைக்கிழங்கு முள்ளங்கி, சவ்வரிசி முதலியவைகளிலும் நிறைந்திருக்கிறது

(3) அதிக கஷ்டத்துடன் உபயோகிக்கக் கூடிய ஊன் பதார்த்தங்கள் மில்லில் அரைக்கப்பட்ட அரிசிகளிலும், வெண்மையான மாவுகளிலும், தப்பாக்கி அரிசியிலும் இருக்கின்றன.



சக்கரை, கொழுப்பு, எண்ணைகள் முதலியவைகள் ஊன்பதார்த்தங்களை உடைத்தாயில்லாத வஸ்துக்கள்.

உணவுகள் சரீரத்திற்குச் சுலபமாய் உபயோகித்துக் கொள்ளக் கூடிய ஊன் பதார்த்தங்களையே வஹிக்க வேண்டு மென்பதில்லை. மேற் கூறிய முதல் மூன்றுவகை உணவுப் பொருள்களையும் கலந்து உபயோகிப்பது தான் சரியான வழி.

நமது தேசத்தில் குழந்தைகளின் உணவுகள் அரிசி, அல்லது கோதுமை, அல்லது கேழ் வரகு முதலிய தான்யங்களும், கொஞ்சம் காய்கறியும், கொஞ்சம் நெய் அல்லது எண்ணையும் கலந்த தாயிருக்கின்றன. ஆகவே பால் வஸ்துக்கள் முதலியவைகளை அதிகமாகச் சேர்த்து உண்கிற இதர தேசக் குழந்தைகளைப் போல் நமது தேசக் குழந்தைகள் வளர்கிற தில்லை. ஊன் பதார்த்தங்கள் உணவுகளில் சரியாக அமையாம லிருப்பது தான் நமது தேசத்தவர்களின் பல நோய் களுக்கும் காரணமாக விருக்கிறது. நாம் மத ஆசார காரணத்தினுல் மாம்ஸம், முட்டை முதலியவைகளைப் புசிக்கக்கூடாம லிருப்பது நாம் தக்க உணவைப் புசியாமலிருப்பதற்குக் காரணமாகாது. மாம்ஸம், மீன், முட்டை முதலியவைகளுக்குப் பதிலாக நாம் பால், தயிர், மோர் முதலியவைகளைத் தேவையான மட்டும் சாப்பிடலாமே. இவைகள் தக்க அளவுகளில் நமது உணவுகளில் சேர்க்கப்பட்டால் நாம் மாம்ஸம் முதலியவைகளைப் புசிக்க வேண்டு மென்பதேயில்லை. ஆனல், நமது தேசத்தில் பால், தயிர், மோர் வகைகள் கிடைப்பது வரவர கஷ்டமாய்ப் போகிறது; மாட்டு அபிவிருத்தியும் சவரக்ஷணையும் நன்ருய் நடந்தால் ஒழிய நமது தேச ஜனங்களின் க்ஷேமமும், தேக பலமும் வரவரக் குறைந்து போகும்.

பால், தயிர், மோர், பச்சைக் கீரை முதலியவைகளோடு சாதத்தை சாப்பிடுவது தான் சரியான சாப்பாட்டு முறையாகும். அச் சாப்பாட்டில் சரியான வித ஊன் பதார்த்தங்கள் நிரைந்திருப்பதோடு, தேக வளர்ச்சிக்கும் க்ஷேமத்திற்கும் வேண்டிய பல பதார்த்தங்களும் இருக்கின்றன.

நமது உணவுகள் சரீரத்திற்கு வேண்டிய அளவில் தான் ஊன் பதார்த்தங்களை உடைத்தாயிருக்க வேண்டுமே ஒழிய அவைகளை அதிகப்படியாகவும் கம்மியாகவும் வஹிக்கக் கூடாது. ஊன் பதார்த்தங்களை வஹிக்கிற மாம்ஸம், முட்டை, பருப்பு முதலியவைகளை நாம் அதிகமாயுட் கொண்டால் சரீரமானது தனக்கு வேண்டிய மட்டும் தான் அவ்வஸ்துக்களை உபயோகித்துக் கொள்ளும்; மீதியாக ஏற்படும் வஸ்துக்களை அது குடலில் தள்ளிவிடும். அவைகள் குடலில் கிடந்து அழுகிப்போவதால் விஷ வஸ்துக்களாக மாறி, இரத்த ஓட்டத்தில் கலக்கின்றன. நோய்கள் உண்டாகின்றன.

சரீர வளர்ச்சிக்கும் மராமத்திற்கும் வேண்டியவை ஊன் பதார்த்தங்கள். அவைகள் தான் சரீரக்கட்டிட வேலைக்கு வேண்டிய கட்டிட வஸ்துக்கள்.

சரியான ஊன் பதார்த்தங்கள் உணவுகளிலிருந்தாலொழிய சரீரக்கட்டிடம் சரியாய் அமையாது. சுலபமாய் சரீரம் உபயோகிக்கக் கூடிய ஊன் பதார்த்தங்கள் உணவுகளில் தக்கபடி இல்லாவிட்டால் சரீரம் சரியாய் வளராது. அது சுருங்கிக் குறுகிப்போகும், திராணி இராது, தசைகள் சரியாய் அமையாது, பலமிராது, மூளையும் நரம்புகளும் வலிவில்லாதவைகளாய் ஏற்படும். க்ஷய ரோகம் முதலிய கொடிய வியாதிகள் உண்டாகும். ஊன் பதார்த்தங்களை சரீர பாகங்களோடு சேர்த்து ஒட்டுவதற்கு விடாமின் Aயும் Dயும் வேண்டும்.

## சீதோஷ்ண ஸ்திதிக்கும், காடுகளுக்கும் உள்ள சம்பந்தம்.

காட்டுப் பிரதேசங்களில், திறந்த வெளியுள்ளப் பிரதேசங்களைக் காட்டிலும், அதிக மழை பெய்கிறதென்று, ஆராய்ச்சிகளால் அறியப்படுகிறது. பச்சையுள்ளப் பிரதேசங்களில் மைதானங்களைக் காட்டிலும் அதிக மழை பெய்கிறது. வட இந்தியாவில், சில பிரதேசங்கள் அதிக உஷ்ணமாயிருப்பது காடுகளில்லாமையாலேயே. நீலகிரியில் யூகலிப்டஸ் விருக்ஷ தோட்டங்கள் ஏராளமாயிருப்பதால்தான் அங்கே மழை நாள்கள் அதிகரித்திருக்கின்றனவாம்.

இந்தியாவில் மழை பெய்வது பர்வக்காற்றுகளால்தான். காடுகள், மழைப் பிரவாஹங்களை, அதிக வேகமாக ஓடிப் போகாமல் தடுக்கின்றன. இந்தியாவில், பல காடுகள், அதிக மேய்ச்சலாலும், பயிர் முயர்ச்சிகளாலும், அழிக்கப்பட்டமையால், மழைப் பிரவாஹங்கள், வெகு வேகமாய் ஓடிப்போய் விடுகின்றன.

ஹிமாலயத்தின் கிழக்குச் சரிவுகளிலும், பிரம்மபுத்ரா நதிக்குத் தென்புறங்களிலும், சில வருஷங்களுக்கு முன், அடர்ந்த காடுகள் இருந்தன. அப்பிரதேசங்களில் ஜூன் மாதத்திலிருந்து அக்டோபர் வரையில், சுமார் 200 செமி மழை பெய்து வந்ததாம். வெகு வெகு காலமாக அப்பிரதேசங்களில் வஸித்த பர்மியர்கள், ஒவ்வொரு வருஷமும், ஒவ்வொரு காட்டைக் கொளுத்தி, அதில் பயிர் செய்து வந்தார்களாம். ஜனத்தொகை குறைவாகவிருந்தபடியால், அவர்கள், எல்லாக் காடுகளையும் இவ்விதமாகக் கொளுத்தி, உபயோகிப்பதற்கு 50, 60 வருஷங்கள் சென்றனவாம். இந்த 50, 60 வருஷ காலத்திற்குள் முந்தி அழிக்கப்பட்ட காட்டு பூமிகள், திரும்பவும் காடுகளாக ஏற்பட்டனவாம். பிரிடிஷ் அரசு ஏற்பட்ட பிறகு ஜனத்தொகை அதிகரித்து வந்தது. காட்டை யழித்துப் பயிர் செய்வது அதிகரித்தது. 50, 60 வருஷ காலம் வரையில் ஒன்று ஒன்றாய் அழித்து, உபயோகிக்கக் கூடிய காட்டுப் பிரதேசம் சீக்கிரத்தில் அழிக்கப் பட்டதால், ஜனங்கள், திரும்பவும் தாங்கள்



முந்தி பயிர் செய்த பூமிகளுக்கே, அவைகளில் காடுகள் வளர்வதற்கு முன்னேயே, வர வேண்டியதாக நேரிட்டது. பழய காலத்திலோ, அழிக்கப் பட்ட காடுகள் படிப்படியாகக கிளம்பி வந்து கொண்டிருந்தமையால், ஏதோ ஒரு பாகத்தில் பயிர் செய்யப் பட்ட போதிலும், மற்றப் பிரதேசங்கள் காடுகளாகவே நிரம்பியிருந்தன. அக்காரணத்தினால், மழை பெய்வதிலும், பிரவாஹம் பூமியில் நிற்பதிலும், யாதொரு குறைவும் கஷ்டமுமில்லாமலிருந்தது. பிறகு காடுகள் திரும்பிக் கிளம்புவதற்குள் பூமிகள் பயிர் செய்ய வேண்டியதாக ஏற்பட்டமையால் மழை பெய்வதும் குறைந்தது, பிரவாஹங்களும் பூமியில் நிற்காமல் ஓடிப் போய் விட்டன. உஷ்ண மாதங்களில் ஜலக் கஷ்டமும் ஏற்பட்டது. பயிர்த் தொழில் சரிவர அநுஷ்டிக்கக் கூடவில்லை. ஜனங்கள் தங்களுடைய சொந்த கிராமங்களை விட்டு விட்டு புதியப் பிரதேசங்களுக்குப் போய்க் குடியேறத் தொடங்கினார்கள்.

அநேக ஊர்களில், ஜனங்கள், அதிக வெள்ளாடுகளை வைத்துக் கொண்டு, அவைகளைக் காடுகளில் மேய்ப்பதால், காடுகள் அழிந்து போகின்றன. அது காரணம் பற்றியே காஷ்மீரில் வெள்ளாடுகளின் நிமித்தம் அதிக வரி விதிக்கப் பட்டிருக்கிறதாம்.

## ஜெர்மனி தேசத்திய வியவஸாய முயர்ச்சிகள்.

[சி. மாஹாதேவன் எம். ஏ.]

ஜெர்மனி தேசத்தில் வியவஸாயம் ஒரு முக்கியமான தொழிலாயிருக்கிறது. வியவஸாய உற்பத்தி அந்த தேசத்தில் அதிகரித்துக் கொண்டு வருகிறது. வியவஸாயம் பிரபலமாய் அநுஷ்டிக்கப் பட்டு வருவதால், காலி நிலங்களே கிடையாது. ஆகவே, ஜனங்கள், அதிக உற்பத்திகளை, இருக்கப் பட்ட வியவஸாய பூமிகளிலிருந்தே, உற்பத்தி செய்து கொள்ள வேண்டியதாகவிருக்கிறது. வியவஸாய ஞானம் அதிகரித்திருக்கிறது. புதிய வித எருக்கள் தயாரிக்கப்பட்டு பிரபலமாய் உபயோகப் படுத்தப்படுகின்றன. மாற்று சாகுபடி முறைகளும் அதிகமாய் அநுஷ்டிக்கப் படுகின்றன.

ஜெர்மனியில் எல்லாப் பிரதேசங்களிலும், நிலங்களும், வியவஸாய செளகரியங்களும் ஒரே மாதிரியாய் இல்லை. கிழக்குப் பிரதேசங்களில் கோடை கடுமையாயிருக்கிறது. அவைகளில் பெரிய வியவஸாயத் தோட்டங்கள் அடர்ந்திருக்கின்றன. அவைகளில் சம பூமிகள் அதிகம். அப்பிரதேசங்களில் வியவஸாயத் தொழிலே ஜனங்களால் அநுஷ்டிக்கப் படுகிறது; கைத்தொழில்கள் அநுஷ்டிக்கப் படுகிறதில்லை. மண்கள் களியாயில்லாமல், மணல் பாங்காகவிருக்கின்றன; உருளைக் கிழங்குதான் அப் பிரதேசங்களில் முக்கியமான பயிர். மத்திய ஜெர்மனியில் கோதுமையும், பீட்டும், முக்கிய பயிர்களாகவிருக்கின்றன.

வடமேற்கு ஜர்மனியில் கோடை காலத்தில் உஷ்ணம் குறைவாக விருக்கிறது. மேய்ச்சலிற் கேற்ற புல் நிலங்கள் அந்தப் பிரதேசத்தில் அதிகமாக விருக்கின்றன. தவிரவும், புல் முதலிய மாட்டுத் தீனிப் பயிர்கள் அப்பிரதேசங்களில் பிரபலமாக அநுஷ்டிக்கப் படுகின்றன. மாட்டு அபிவிருத்தி முயர்ச்சிகளும் அதிகமாக நடத்தப் படுகின்றன. தான்யங்கள் அதிகமாகப் பயிர் செய்யப் படுகிறதில்லை. நிலங்கள், அண்ணன் தம்பிகளால், பாகித்துக் கொள்ளப் படுகிறதில்லை. தகப்பனுடைய் நிலம் முழுவதும் மூத்த பிள்ளையையே சேர்ந்து விடுகிறது. இக்காரணத்தினால்தான் அப் பிரதேசங்களில், அநேக நூற்றாண்டுகளாக, ஒவ்வொரு நிலமும் ஒரே குடும்பத்துக்கே சொந்தமாயிருக்கிறது.

தெற்கு ஜெர்மனியிலும், மேற்கு ஜெர்மனியிலும், மலைகள் அதிகமாயிருக்கின்றன. அப்பிரதேசங்களில் அநேக நேர்த்தியான பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. அப்பிரதேசங்களில் நிலங்கள், அண்ணன் தம்பிகளால் பாகித்துக் கொள்ளப் படுகின்றன. ஆகவே, பயிர் நிலங்கள் துண்டு துண்டுகளாகவிருக்கின்றன. பழவகைப் பயிர் அதிகமாக அநுஷ்டிக்கப் படுகிறது. கோதுமையும் அதிகமாகப் பயிர் செய்யப் படுகிறது.

ஜெர்மனியில் காடுகள் அதிகமாக விருக்கின்றன. அவைகள் நன்றாகவும் பரிபாலிக்கப் படுகின்றன. காடு வளர்ப்பு, பாதுகாப்பு முதலிய விஷயங்களில் இராஜாங்கத்தவர்களும், ஜனங்களும், மிகவும் ஊக்கமுடையவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும், வியவஸாய பள்ளிக் கூடங்களும் அபிவிருத்திச் சங்கங்களும் இருக்கின்றன. ஸர்வ கலாசாலைகளிலும், உயர்வுப் படிப்புப் பள்ளிக் கூடங்களிலும், வியவஸாயக் கல்வி முறையானது கட்டாய முறையாக அனுஷ்டிக்கப் படுகிறது. வியவஸாயப் பொருள் காக்ஷிகள் எல்லா ஊர்களிலும அடிக்கடி நடத்தப் படுகின்றன. வியவஸாய ஆராய்ச்சி முயர்ச்சிகளும் பிரபலமாய் கைக் கொள்ளப் படுகின்றன.

# கிராம முன்னேற்றமேற்பட வேண்டிய வழியில் கிராமாந்தர வர்த்தமான பத்திரிகைகளின் உபயோகம்

[எஸ். எஸ். இராஜ கோபாலன், பி. ஏ. (ஹானர்ஸ்.)]

நமது தேசாபிவிருத்திக்கு கிராம முன்னேற்ற முயர்ச்சிகள் வெகு அவசியமானவை யென்றே எல்லோராலும் ஒப்புக் கொள்ளப் படுகிறது. கிராம ஸமூக வாழ்வை சரியான ஸ்திதியில் அமைப்பதற்கு, இராஜாங்கமும் பிரஜைகளும் இடைவிடாமல் உழைக்க வேண்டியதா யிருக்கிறது.

கிராம முன்னேற்றம் சரியாய் ஏர்பட வேண்டுமானால், கிராம ஜனங்கள் கல்வியையும், விவேகத்தையும் அடைய வேண்டும். இவ்விரண்டையும் அவர்கள் அடையாமலிருந்தால், அவர்கள் அபிவிருத்தி யோசனைகளை, ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். வியவஸாய நிரூபணத் தோட்டங்களும், பிரயாணப் படக் காக்ஷி வண்டிகளும், இராப் பள்ளிக்கூடங்களும், கிராம கிரந்த வாசகசாலைகளும் அநேக இடங்களில் ஏற்படுத்தப் பட்டு, கிராம ஜனக் கல்வி விஷயமாக, அவைகள் நன்றாய் உபயோகப் பட்டு வருகின்றன வென்பதில் சந்தேகமேயில்லை. ஆயினும், கிராம ஜனங்களை ஒன்றுகூட்டி அவர்களுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டு அவர்களுக்குப் பிரபஞ்ச வர்த்தமானங்களைத் தெரிவித்து அவர்களுக்கு விவேக மார்க்கங்களில் ருசியை யுண்டாக்கக் கூடிய வர்த்தமானப் பத்திரிகைகள் கிராமங்களில் உண்டாக வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வாரப் பத்திரிகை ஏற்பட வேண்டும். நம்முடைய தேசத்தில் அநேக கல்விகற்ற வாலிபர்கள் உத்தியோகமே யில்லாமலிருக்கிறார்கள்; அவர்கள் இவ் வேலையை யெடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு லோகல் போர்டும் ஒரு கிராமப் புனருத்தாரணப் பத்திரிகை பிரசுரிக்கலாம். செலவுகள் கவர்மெண்டின் கல்வி திட்டத்திலிருந்தும் லோகல் போர்டு திட்டங்களிலிருந்தும் நடத்தப் பட வேண்டும். முதல் முதலில் இவ்விஷயத்தில் கஷ்டங்களும், நஷ்டங்களும் ஏற்படக் கூடும். ஆனால் காலக்கிரமத்தில் பத்திரிகைள் விருத்தியாகி கிராம ஜனங்கள் கல்வியையும், விவேகத்தையும் அடைவார்களென்பதில் சந்தேகமில்லை. ஐக்கிய நாடுகளில் கிராமங்களில் பத்திரிகைகள் ஏற்பட்டமையால்தான் அந்நாடுகளின் கிராம ஜனங்கள் கல்வியையும் விவேகத்தையும் வஹிக்கிறார்கள். அமெரிகாவில் கோடீசுவரர்கள் கிராமப் பத்திரிகைகளின் சம்பந்தமாக பண உதவி செய்து வந்ததன் பேரில் அந்த தேசத்தில் கோடிக் கணக்கான கிராம பத்திரிகைகள் உண்டாயின. அமெரிக்கர்கள் உலக தான்ய வியாபார வழிகளில் அதிக லாபங்களையடைந்து தனவான்களாக ஏற்பட நோக்கங் கொண்டு உலகத்திற்கு வேண்டிய அளவுகளில் தான்யங்களை உற்பத்தி செய்கிறபடியால் கிராம பத்திரிகைகள் அதிகமாய்க் கிளம்பிவிட்டன. ஐக்கிய நாடுகளில் 10000 கிராம வர்த்தமான பத்திரிகைகள் பிரசுரிக்கப் படுகின்றன. 50 நபர்களுக்கு மேல்பட்ட ஜனங்களை உடைத்தான கிராமங்களிலெல்லாம் வர்த்தமானப் பத்திரிகைகள் பிரசுரிக்கப் படுகின்றன. ஒவ்வொரு கிராமப் பத்திராதிபனும் தானே அச்சுக் கோத்து அச்சடித்து பத்திரிகையை வெளியிடுகிறான். கிராமப் பத்திரிகைகளில் கிராம வர்த்தமானங்கள் பிரசுரிக்கப் படுகின்றன. வியவஸாய விஷயங்களும், விளைச்சல் விஷயங்களும், விலை வாசி விஷயங்களும் கூடப் பிரசுரிக்கப் படுகின்றன. கிராம ஜனங்களுக்கு வேண்டிய விஷயங்களெல்லாம் வரையப் படுகின்றன. வர்த்தமான பத்திரிகைகளை வாங்கிப் படிக்கப் பணமில்லாம லிருந்தால், கிராமத்தவர்கள் தான்யத்தையோ காய்கறிகளையோ கொடுத்து வாங்குகிறார்களாம்.

199391

# குடியானவர்களின் பாங்கி.

பயிரிடுவோர்க்கு சுவல்ப வட்டியின் பேரில் நீண்ட காலக் கடன்களைக் கொடுக்கக் கூடிய பாங்கிகள் எல்லா தேசங்களிலுமிருக்க வேண்டும். அநேக ஏகரா நிலங்கள் பயிர் செய்யப்படாம லிருப்பதற்குக் காரணம் குடியானவர்கள் அவைகளைச் செப்பனிட்டுப் பயிர் செய்யப் பணமில்லாம லிருப்பது தான்.

1921-ம் வருஷத்தில் ஆஸ்திரேலியாவில் ஒரு குடியானவர் பாங்கி ஏற்பட்டது. 1923-ம் வருஷத்தில் அதன் கிளை ஸ்தாபன மொன்று நியூ ஸவுத் வேல்ஸில் ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் வசூலான மூலதனம் 40000 பவுண்டுகளாக விருந்தது. ஆரம்பமான சில வாரங்களுக்குள்ளே மூலதனம் பெருகி விட்டது. பந்நிரண்டு மாதங்களில் 42 கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டன. மூலதனம் $1\frac{1}{2}$ இலக்ஷம் பவுண்டுகளாகி பெருகி விட்டது. அவ் வருஷத்திய லாபம் 975 பவுண்டுகளாக ஏற்பட்டன. இரண்டாம் வருஷத்தில் மூலதனம் $2\frac{1}{2}$ இலக்ஷங்களாகப் பெருகிற்று, லாபம் 3000 பவுண்டுகளாக ஏற்பட்டன. ஆஸ்டிரேலியாவிலே இது வரையில் ஒரு பாங்கியும் இவ்விதமாக அபிவிருத்தியை யடைந்ததில்லையாம். இந்த பாங்கி உண்டான பிறகு தான் கிராமாந்தரத்திலுள்ள குடியானவர்களுக்கு திரவிய செளகரியங்கள் உண்டாயின. 1923-ம் வருஷத்தில் ஆஸ்திரேலியாவில் ஒரு பெரிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது இதர பாங்கிகளெல்லாம் கடன் வாங்கி யிருந்த குடியானவர்களிட மிருந்து கடன் தொகைகளை வசூலித்தன. குடியானவர் பாங்கி மாத்திரம் அவர்களுக் கெல்லாம் மேல் மேலும் கடன்களைக் கொடுத்து உதவிசெய்தது. குடியானவர் பாங்கியில் டிபாஸிட்டுகள் வந்து நிறைகின்றன.

அறுப்பான உடனே குடியானவர்கள் மாசூல்களை ஈன விலைக்கு விற்காமல் கட்டிவைத்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக நல்ல விலை காலங்களில் விற்றுக் கொள்ளும் படியாக, இந்தக் குடியானவர் பாங்கியானது குடியனவர்களுக்கு அறுவடையான மாசூல்களின் பேரில் அவைகளின் கிரயத்தின் பாதி தொகையை கடன் கொடுத்து அம்மாசூலை களஞ்சியங்களில் கட்டிவைக்கிறது. களஞ்சியத்திற்கு வாடகை சுவல்பத் தொகையாக விருக்கிறது. பாங்கியானது கிராமங்களில் பெரிய களஞ்சியங்களைக் கட்டி வைத்திருக்கிறது.

இந்த பாங்கியில் பங்குக் காரர்கள் குடியானவர்களா யிருக்கிறார்கள். அவர்களே அத்தியக்ஷகர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். அத்தியக்ஷகர்கள் கடன் கொடுக்கிற வழியில் பாங்கியின் உத்தியோகஸ்தர்களுக்கு யோஜனைகளைக் கொடுத்து ஒத்தாசை செய்கிறார்கள். பாங்கியின் உத்தியோகஸ்தர்



களும் சிப்பந்திகளும் வியாபார பாங்கிகளில் உத்தியோகமாயிருக்கும் சிறந்த நபர்களிலிருந்து பொறுக்கப்பட்டு நியமிக்கப் படுகிறார்கள். கடன்கள் நில அடமானத்தின் பேரிலும், குத்தகை லாபங்களின் பேரிலும் மாசூல்களின் பேரிலும், அறுவடை யாகாத பயிர்களின் பேரிலும் கொடுக்கப்படுகின்றன. கிளைஸ்தாபனங்களின் காரியஸ்தர்கள் குடியானவர்களுக்குப் பணமுடைகளுக்குத் தக்கபடி கடன் கொடுத்து உதவும்படி விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுக்குக் கருவி முதலியவைகளையும் அக்காரியஸ்தர்கள் வாங்கிக் கொடுத்து உதவுகிறார்கள். குடியானவர் பாங்கியானது ஏஜண்டுகளைப் பல ஊர்களில் நியமித்துக் கொண்டு விலை வாசி விவரங்களை யறிந்து குடியானவர்களுக்குத் தெறிவிக்கிறது.

வெகு காலம் வரையில் வியவஸாயிகள் தங்களுடைய தான்யங்களைத் தங்களுக்கு எவ்வளவு அதிக விலை அகப்படக் கூடுமோ, அவ் விலைக்கு விற்க முயன்று வந்தார்கள். தான்யம் உபயோகப் படுத்துவோர்களும் தங்களால் எவ்வளவு குறைந்த விலைக்கு அவைகளை வாங்கக் கூடுமோ அவ் விலைக்கே வாங்க எத்தனப்பட்டு வந்தார்கள். இப்படி ஏற்பட்ட லாபங்களில் பெரும் பாகம் தரஹரிகளுக்கு அல்லது வாங்கி விற்பவர்களுக்கே போய்க் கொண்டிருந்ததே ஒழிய உற்பத்தி செய்தவர்களுக்காவது, உபயோகிக்கப் பட்டவர்களுக்காவது சேர்ந்ததே இல்லை. குடியானவர் பாங்கி ஏற்பட்ட பிறகு மாசூல்கள் கிரமமான விலைக்கு விற்கப்படுவதும், உபயோகிக்கிறவர்கள் கிறமமான விலையைக் கொடுத்து வாங்குவதும் தான் வழக்கமாக ஏற்பட்டிருக்கிறது. தரஹரி சம்பந்தமும் நின்று போயிற்று. உற்பத்தி செய்வோர் தக்கலாபங்களை அடைகிறார்கள்.

பாங்கியானது அதிக லாபத்தை யடைய முயலுகிற தில்லை. கிராம வியவஸாயிகளுக்கு சுவல்ப வட்டியின் பேரில் கடன் கொடுத்து உதவவேண்டுமென்பதே அதன் நோக்கமா யிருக்கிறது. பாங்கியின் முயர்ச்சிகளுக்கு வேண்டிய பணங்கள் பட்டணங்களில் வசிக்கும் தனிகர்களிட மிருந்தே வருகின்றன. குடியானவர் பாங்கி குடியானவர்களுக்கு நிலம், மாசூல் முதலிய தகுந்த பொருப்புகளின் பேரில் கடன் கொடுப்பதால் அவாகளும் தங்களுடைய பணங்களுக்குப் பயமே யில்லை யென்று அறிந்து மேலே மேலே பணங்களை அதில் போட்டுக் கொண்டு வருகிறார்கள்.

குடியானவர் பாங்கியானது கிராம ஜனங்களின் அபிவிருத்தி விஷயமாய் கட்டுரைகளையுடைய ஒரு வர்த்தமான பத்திரிகையைப் பிரசுரித்து வருகிறது. அது அப் பத்திரிகையை பங்குக் காரர்களுக்கு இலவசமாய்க் கொடுக்கிறது. மேலும், கிராமங்களில் குடியானவர்களிற்கு சாகுபடி நிலங்களை கொடுக்கிற வழியிலும் அவர்களுக்கு நிலங்களை வாங்கிக் கொடுப்பதிலும் சம்பந்தப் படுகிறது. ஜில்லாக்களில் ரோட்போர்டுகளுக்கும், முனிசிபல் போர்

டுகளுக்கும் வேண்டிய கடன்களையும் வாங்கிக் கொடுக்கிறது. ஜனங்கள் பல தேசங்களுக்கும் பணமனுப்புவதற்கு சௌகரியங்களை வஹிக்கிறது. வியவஸாயிகள் பல தேசங்களுக்கும் அனுப்புகிற ஏற்றுமதி தான்யங்களைத் தானே வாங்கிக் கொண்டு அவைகளை சாவதானமாக அனுப்புகிறது.

## வியவஸாய முன்னேற்ற முயர்ச்சிகளைப் பற்றி யோஜனை சொல்ல வேண்டியதற்காக கவர்மெண்டாரால் ஏற்படுத்தப் பட்ட சபை.

[ராவ் பஹதூர் கே. எஸ். வெங்கட்ட ராமய்யர் ]

ரிஸர்வட் பாரெஸ்டுகளில் காட்டு மிருகங்களைத் துப்பாக்கியால் சுடுவதற்கு லைசென்ஸுகள் ஜனங்களுக்குக் வேண்டிய நிமித்தம் வியவஸாய ராயல் கமிஷனர்கள் செய்திருக்கிற யோசனைகளைப் பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று மாஹாண சபை தீர்மானித்தது. உழவு மாட்டு அபிவிருத்தி விஷயமும் பசு அபிவிருத்தி விஷயமும் ஆலோசிக்கப்பட்டது. தஞ்சை ஜில்லாவில் கவர்மெண்டார் ஒரு மாட்டு அபிவிருத்தி ஸ்தாபனத்தை ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார்களாம். சிலேஜ் புல் சம்பந்தமாக ஏற்கனவே கவர்மெண்டார் செய்யும் முயர்ச்சிகள் இன்னும் அதிகமாக நடத்தப்படுமாம். பருப்பு வகைப்பயிர்களுக்கு சர்க்கார் தண்ணீர் இலவசமாகக் கொடுக்கப் பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டதாம். கலப்பு நெய்கள் கடைகளில் விற்கப்படாமலிருக்கும்படி பல ஆலோசனைகள் நடத்தப்பட்டன. மாட்டு வைத்திய சாலைகள் அதிகப் படுத்தப் பட வேண்டுமென்றும், மாட்டு வைத்தியர்கள் இன்னும் அதிகமாய் நியமிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் கைக்கொள்ளப் பட்டது. மாட்டு நோய் மூல ஆராய்ச்சி சாலைகளும் உண்டாக்கப் பட வேண்டுமென்றும் கூறப்பட்டது. பஞ்சாபிலும் பர்மாவிலும் போல் நம்முடைய மாஹாணத்திலும் ரோடு போர்டு ஏற்படுத்தப் பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. கிராமாந்தரங்களில் அதிக ரஸ்தாக்களும், பாட்டைகளும் ஏற்படுத்தப் பட வேண்டு மென்றும் தீர்மானிக்கப் பட்டது. பழங்கள், காய் கறி சம்பந்தமாக ரெயில்வேக்களும் தபால் ஆபீசு இலாகாவும் சார்ஜுகளைக் குறைக்க வேண்டு மென்றும் தீர்மானிக்கப் பட்டது. கவர்மெண்டு பேப்பர்கள் அதாவது கவர்மெண்டு கடன் பத்திரங்களின் சம்பந்தமாக ஜனங்கள் அடையும் வட்டித் தொகைகளின் பேரில் கவர்மெண்டார் வருமான வரியை விதிக்கக் கூடாதென்றும், கோஆபரேடிவ் ஸொஸைடிகள் போஸ்டாபீஸு மூலமாக பணங்களை மணி ஆர்டர் செய்தால் அம்மணி ஆர்டர்களுக்கு மணி ஆர்டர் கமிஷன் விதிக்கப்படக் கூடாதென்றும் தீர்மானிக்கப் பட்டது. கிராம காடுகள் ரெவுனியூ போர்டாரின் மேல் பார்வையில் இருப்பது நல்ல ஏற்பாடென்று ஒப்புக் கொள்ளப் பட்டது.



# கிராமங்களின் க்ஷீண தசை

## முன்னேற்றத் துறைகள்

### கவி ரவீந்திரரின் பிரசங்கம்

சென்ற 10ந் தேதி கல்கத்தாவிலுள்ள ஸ்ரீநிகேதனத்தில் கிராமப் புனருத்தாரண கூட்டம் திறந்து வைக்கப் பட்டது. அதுகாலை கவி ரவீந்திரநாத தாகூர் செய்த பிரசங்கத்தின் சாரம் வருமாறு:—

நமது தற்காலக் கல்வி ''யிரற்றதாக இருக்கிறது. அது ஞானம் கலைகள் நாகரிகம் இவற்றில் உண்மையான சிரத்தை யற்றதாக இருக்கிறது. கிராமங்கள் தமது வாழ்க்கையம்சங்கள் பலவற்றை இழந்துவிட்டன. இங்கு மனோ உற்சாக மற்ற முறையில் கிருஷித் தொழில் செய்யப் படுகின்றது நமது கல்விக்கு நகரங்களே முக்கியமான ஸ்தலங்களாக இருக்கின்றன. நமது சமூக வாழ்கைக்கு கிராமங்களே உறைவிடமாக இருக்கின்றன. இவை இரண்டும் நீரோட்டமற்று ஆரோக்கியமற்ற வைகளாகக் கூடிய ஆற்றங்கரைகளைப் போலிருக்கின்றன. நமது தேசத்தின் உயிர் நிலைகள் இம்மாதிரி க்ஷீணதசையை அடைந்திருப்பதைக் கண்டால் ஏற்படும் வருத்தமானது என்னை எனது இலக்கிய வேலைகளை விட்டு வெளிவரச் செய்திருக்கிறது. எனது சக்தி குறைவாக இருந்தபோதிலும் சுற்று வட்டத்திலுள்ளவர்கள் எனது வேண்டுகோளுக் கிணங்க முன் வராவிட்டாலும் இந்தக் கூடத்தை ஸ்தாபிக்கும்படி அவ்வருத்தம் என்னை நிர்ப்பந்தித்தது. இந்தக் கூடத்தின் ஒரு பாகம் கல்வியைக் கவனிக்கும். மற்றொரு பாகம் கிராமப் புனருத்தாரண வேலையைச் செய்யும். இரண்டு பாகங்களும் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்த முடையவையாகும்.

எங்களுடைய கிராமப் புனருத்தாரண வேலைக்கு ஸ்ரீநிகேதனம் என்று பெயர். இது பின் கண்ட காரணங்களுக்காகவே ஆரம்பிக்கப் பட்டது:—

இந்தியாவிலுள்ள கிராமங்கள் தர்மத்தினாலோ அல்லது வெளியிலிருந்து வரும் அவசர போதனைகளினாலோ ஒரு போதும் அனுகூலமடையப் போவதில்லை. கிராமங்களின் ஜீவிய சக்தி குறைந்து வருகிறது. அதனை அவை பூரணமாகத் திரும்பப் பெறும்படி செய்யவேண்டியதவசியம். அதன் வேலைகள் அதற்குள்ளாகவிருந்தே நடைபெற வேண்டும்.

இந்த நோக்கத்துடன் நெடுநாள் தீவிரமாக முயற்சி செய்ததன் பயனாக அருகிலுள்ள பல கிராமங்கள் இந்தக் கூடத்தைச் சுற்றி ஒருங்கு சேர்ந்து கொண்டன. அவர்களது நம்பிக்கையைப் பெறவே எங்களுக்கு வெகு காலமாயிற்று. நாங்கள் அவர்களது நண்பர்களென்றும் அவர்களுடைய உயர்விற்காகவும் க்ஷேமத்திற்காகவுமே நாங்கள் அவர்களுடன் நட்புக் கொள்ளுவதாகவும் வேறு எக்காரியத் திற்காகவும் நட்புக் கொள்ள வில்லை என்றும்

அவர்களுக்கு சந்தேகமற நிரூபித்துக் காட்டிய பிறகு அவர்கள் மலேரியாவை ஒழித்தல், ரஸ்தாக்களை விருத்தி செய்தல் போன்ற பல காரியங்களில் எங்களுடன் சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்தனர். அவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் வேறு பல வழிகளிலும் உதவி செய்திருக்கின்றனர். முன் காலத்தில் நமது கிராமங்கள் பெரிதும் தமது சில பணக்காரப் பிரஜைகளை தமது க்ஷேமார்த்த வேலைகளுக்கு நம்பியிருந்தன. அவர்கள் தங்கள் செல்வத்தின் பொறுப்பை உணர்ந்திருந்தனர். அவர்கள் நேர்மறைவான வரிக்குத் தங்களை தாங்களே உட்படுத்தி வந்தனர், அவர்கள் அளவுக்கு மிஞ்சிகூடத் தங்களுக்குத் தாங்களே இந்த நேர் மறைவான வரிகளை விதித்துக் கொண்டு வந்தனர். இம்மாதிரி செய்ததால் அவர்களுக்கு கௌரவம் ஏற்பட்டு வந்தது. அவர்கள் தங்களுடைய பகிரங்கமான தாராளத் தன்மையால் சமூகத்தாரிடைத் தங்களுக்கு உயரிய அந்தஸ்தையும் கௌரவத்தையும் அடைய முயன்றார்கள். அவர்கள் அரசர்களிட மிருந்து கிடைக்கும் கௌரவப் பட்டத்தைவிட இந்தக் கௌரவ பட்டமே உயர்ந்ததெனக் கருதினார்கள். அக்காலத்தில் செல்வம் சிலர் வசப்பட்டிருந்த போதிலும் அவை உண்மையில் சமூகத்திற்கே சொந்தமாக இருந்தன. சமூக சேவை செய்பவர்களுக்கு அதனால் அநுகூலமடைந்தவர்கள் சமூக கௌரவமளித்தார்கள். இம்மாதிரி சமூக கௌரவமும் சமூக ஊழியமும் பரிவர்த்தனை செய்து கொள்ளப் பட்டதால் பணக்காரர்கள் ஜனங்களுக்குச் செய்யும் நன்கொடைக்குள்ள அகௌரவம் நீங்கி விடுகின்றது. ஆனால் தற்போது அந்நிலைமை மாறிவிட்டது. சமூகத்திற்குச் சிறந்த உதவியாக இருந்தவர்கள் நகரங்களுக்கு வந்து விட்டார்கள். இதனால் முன்னம் க்ஷேமலாபத்தைப் பெருக்கி வந்த சாதனம் பெரிதும் பலனளிக்காத முறையில் வீணாக்கி வரப்படுகிறது. தற்பொழுது செல்வம் தனிப்பட்ட நபர்களுக்குரியதென்ற தன்மை வாய்ந்ததாகி விட்டது. பணக்காரர்கள் எப்பொழுதேனும் செய்யும் தர்மமும் அதன் நோக்கத்தைக் கீழ்மைப் படுத்துகிறது. நன்கொடைகள் அதனை யளிப்போருடைய ஒழுக்கைக் கெடுக்கின்றது. இதனால் கிராமவாசிகள் தற்கால நீதிக்கிணங்க தங்களைத் திருத்தியமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யா விட்டால் அவர்கள் வாழ்க்கைப் போட்டியில் தோல்வி யுறுவார்களென்பது நிச்சயம்.

நம்மைச் சுற்றியுள்ள கிராமங்கள் அதோகதி யடையும் போன்ற ஸ்திதியிலிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். அவை வாழ்க்கைச் சந்தோஷமற்றிருக்கின்றன. அவை கேடுகளை எதிர்க்கும் சக்தியுமற்று இருக்கின்றன.

நாம் அவைகளை அதிக தன்னம்பிக்கை யுள்ளவையாகச் செய்ய விரும்புகிறோம். அவை உறுதியுடன் தமது கதியைத் தாமே நிர்ணயிக்கும் பொறுப்பு கொள்ள வேண்டுமென வற்புறுத்துகிறோம். நாங்கள் நகருக்கும் கிராமத்திற்குமுள்ள வேறுபாடுகளைச் சமரஸப்படுத்தவும் வகுப்புகளுக்கும் பாமர ஜனங்களுக்கும் ஏற்பட்டுள்ள வேற்றுமைகளைப் போக்கவுமுள்ள வேலையை மேற்கொண்டிருக்கிறோம். இதில் நாங்கள் எவரிடமும் பக்ஷபாதங் கொள்ளவில்லை; எவரிடமும் விரோதங் கொள்ளவில்லை. எவர் உதவியளித்தாலும் எங்கு உதவியளித்தாலும் அதனை ஆவலுடன் ஏற்றுக் கொள்வோம். நமது வாழ்க்கையின் எந்தப் புறத்திலும் கட்சிப் பிரதி கட்சிகளைக் காண்கிறோம். இதனால் பிளவுகள் உண்டாகின்றன. மானிட சமூகம் நிலைத்து நிற்க விரும்பினால் அது முன்னேற்ற மடையும் பொழுது இப்பிளவுகளைப் போக்கிக் கொண்டே போக வேண்டும்.—

(ஸ்வராஜ்யா)



## டென்மார்க்கில் கிராமஜன பள்ளிக்கூடங்கள்.

டென்மார்க்கு தேசத்தில் ஜனத்தொகையில் காலே அரைக்கால் பங்கு கிராம ஜனங்கள், அந்த தேசத்தின் பிரஜா க்ஷேம உயர்விற்கு விவசாயம் தான் காரணம். டென்மார்க்கின் ஜனங்கள் உழைப்பாளிகள். சாகுபடிக் கேற்ற விஸ்தீரணத்தில் முக்கால் பங்கு பயிரிடப் படுகிறது. ஐரோப்பாவிலேயே டென்மார்க்கில் தான் கூட்டுறவு இயக்கம் பிரபலமாய் நடைபெறுகிறது. ஜனங்கள் கல்வியையும், விவேகத்தையும் அடைந்தவர்களாகவுமிருக்கிறார்கள். வயது வந்தவர்களுக்குக் கல்வி போதனைகளைக் கொடுக்கிற பள்ளிக்கூடங்கள் அந்த தேசத்தில் அதிகமாக விருக்கின்றன. 18 வயதுக்கு மேல்பட்டும் 25க்குள்பட்டு மிருக்கிற ஜனங்கள் அவைகளில் சேர்க்கப்படுகிறார்கள். வருஷந்தோறும் கோடை காலத்தில் 5 மாதங்களில் புருஷர்களுக்கும், பனி காலத்தில் 3 மாதங்களில் பெண் பிள்ளைகளுக்கும், அவைகளின் போதனைகள் அநுஷ்டிக்கப் படுகின்றன. கிராம ஜனங்கள் தான் இவைகளில் மாணவர்களாக விருக்கிறார்கள். மாணவர்கள் தங்களுடைய வாழ்வுகளை நேர்த்தியாக நடத்த வேண்டுமென்பது தான் இப்பள்ளிக் கூடங்களின் முக்கிய நோக்கமாக விருக்கிறது. கூட்டு வாழ்வு வழிகளில் மாணவர்கள் பயிர்ச்சி செய்யப் படுகிறார்கள். தொழில் கல்வி போதனைகள் அப்பள்ளிக் கூடங்களில் அநுஷ்டிக்கப் படுகிறதில்லை. அவைகள் வியவஸாயப் பள்ளிக் கூடங்களில் அநுஷ்டிக்கப் படுகின்றன. நல்லொழுக்க வழிகளிலும் சரித்திரக் கல்வியிலும் போதனைகள் அநுஷ்டிக்கப்படுகின்றன. புத்தகப் படிப்பு அதிகமாக அநுஷ்டிக்கப் படுகிறதில்லை. உபாத்தியாயர்களின் உபந்யாஸங்களைக் கேட்டே மாணவர்கள் கல்வியை அடைகிறார்கள். கவர்மெண்டார் இப்பள்ளிக்கூடங்களுக்குப் பண ஒத்தாசைகளைச் செய்கிறார்கள். இப்பள்ளிக்கூடங்களின் கல்வி போதனைகளால் தான் டென்மார்க்கில் சிறந்த தேசாபிமானிகளும், ஜனத் தலைவர்களும் உண்டாயிருக்கிறார்கள்; தேசாபிவிருத்தி இயக்கங்களும அந்த தேசத்தில் நன்றாய் நடைபெறுவதற்கும் அவைகளே தான் காரணம்.

# பத்மினீபாய்.

(டி. வி. சுவாமிநாத ஐயர்.)

13ம் நூற்றாண்டில் பட்டாணிய அரசர்கள் நமது தேசத்தை யாண்டு வந்தார்கள். அவ்வரசர்களுள் அல்லாவுதீன் சக்கிரவர்த்தியானவன் பலசாலியாகவும் புகழிற்சிறந்த வனாகவும் இருந்தான்.

அல்லாவுத்தீன் டெல்லியிலிருந்து வருகையில் இராஜ புதனத்தில் பீமசிங்கு என்ற சிங்கம் போன்ற வலிமையும், தீரத்தையும் வஹித்த அரசன் ஒருவன் அரசாண்டு வந்தான். அவருக்கு பத்மினி பாயென்ற, தாமரை மலரைப் போன்ற முகத்தையுடைய, தைரியமும் சாமர்த்தியமும் வாய்ந்த பத்னி இருந்தாள்.

பத்மினியின் அழகு ஹிந்துஸ்தானம் முழுவதும் கொண்டாடப்பட்டிருந்தது. அலாவுதீனும் அதைப் பற்றிக் கேள்விப் பட்டு அவளை மணஞ்செய்து கொள்ள விருப்பங் கொண்டான். தன்னுடைய விருப்பத்தை முடிக்க எண்ணி அவன் ஒரு பெரிய சேனையைத் தயார் செய்து கொண்டு பீமசிங்கின் இராஜ்ஜியத்தின் முக்கிய பட்டணமாகிய சித்தூருக்குச் சென்று அதை முற்றுகை போட்டான்.

பீமசிங்கு உடனே தன்னுடைய சைன்னியங்களைக் கூட்டிக் கொண்டு அலாவுத்தீனுடைய சைந்நியங்களை எதிர்த்தான். இராஜ புத்திர வீரர்கள் வெகு தீரமாய்ப் போர்செய்தார்கள். ஆயிரக் கணக்காய் வீரர்கள் மாண்டார்கள், அலாவுதீனுக்கே தைரியம் குறைந்தது. ஆகவே, அலாவுதீன் தன்னுடைய கோரிக்கையை பீமசிங்குக்குத் தெறிவித்தான். தான் படையெடுத்து வந்ததின் நோக்கம் சித்தூரைக் கைபற்றிக் கொள்வதற் கன்று என்றும், தான் பத்மினி பாயின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பதால் அவளுடை முகத்தைப் பார்த்து களிப்பதற்கே என்றும் தன்னுடைய நோக்கம நிறைவேறுமானால் தான் சித்தூரைப் பிடிக்காமல் சேனைகளுடன் டெல்லிக்குத் திரும்பிப் போய்ச் சேர்வதாகவும் பீமசிங்கருக்குச் சொல்லி யனுப்பினான்.

அதைக் கேட்ட பீமசிங்கு தன்னுடைய இராணியின் முகத்தை சக்கிரவர்த்தி நேரில் பார்க்கக் கூடாதென்றும் ஆனால் அவளுடைய பிரதிபிம்பத்தை அவள் நிலைக் கண்ணாடியில் பார்க்கலாமென்றும், அப்படிப் பார்க்க இஷ்டமிருந்தால் அவன் தமது சேனைகளைக் கோட்டைக்கு வெளியே விட்டு விட்டுத் தான் மாத்திரமே இரண்டொரு காவற்காரர் களுடன் வந்து பார்க்கலாமென்றும் அலாவுத்தீனுக்குச் சொல்லி யநுப்பினான். இராஜபுத்திரர்கள் தங்களுடைய வாக்குகளின் படியே நடப்பவர்களாகையால் சக்கிரவர்த்தி யானவன் பீமசிங்கின் உத்திரவு படியே இரண்டு காவற்காரர்களோடு கோட்டைக்குள் சென்று பத்மினி பாயின் முகத்தை கண்ணாடியில் கண்டான். அலாவுதீன்



கண்ணாடியில் பத்மினி பாயின் முகத்தைப் பார்த்தவுடன் அவன் அவளை எப்படியாவது டெல்லிக்குத் தூக்கிக் கொண்டு போக வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். உடனே தான் கோட்டையை விட்டு வெளியே செல்லப் புறப்பட்டுக் கொண்டு பீமசிங்கைத் தனக்கு வழி காட்டிச் செல்லும்படி கேட்டுக் கொண்டான். பீமசிங்கும் சக்கிரவர்த்தியின் சொற்படியே அவனைக் கோட்டை வாயலுக்கு அழைத்துச் சென்ற பொழுது ஒளிந்திருந்த பட்டாணிய வீரர்கள் பீமசிங்கின் மேல் விழுந்து அவனைக் கைதி செய்தனர். உடனே அலாவுதீன் பீமசிங்கை நோக்கி "பத்மினி பாய் என்னை யடைந்து மணம் புரிந்தாலொழிய நான் உன்னை விட மாட்டேன்" என்று சொன்னான்.

இதைக் கேட்ட பத்மினி பாய் தன் கணவனை அலாவுதீன் கொன்று விடுவானென்று பயந்து அலாவுதீனும் அவனைச் சேர்ந்தவர்களும் சத்தியந்தவறி நடப்பவர்களாகையால் அவர்களிடத்தில் கபடமான நடத்தையையே அநுஷ்டிப்பதே சரியென்று தீர்மானித்துக் கொண்டு பின் வருமாறு சக்கிரவர்த்திக்கு செய்தியனுப்பினாள். "நான் உம்மை அடைய வேண்டுமானால் என் கணவனை நீர் விட வேண்டும். நான் இராணி ஆகப் போவதால் நான் என்னுடைய ஆடை ஆபரணங்களோடும், தாதிகளோடும் டெல்லிக்கு வர வேண்டும். ஆப்கனியர் எங்களை பார்க்கக் கூடாது, நாங்கள் மூடு பல்லக்குகளில் தான் ஏறி வருவோம், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்". அலாவுத்தீன் இவ்வார்த்தைகளைக் கேட்டு ஆனந்த பரவசமாகி பத்மினி பாய் கேட்டுக் கொண்ட படியே சகல ஏற்பாடுகளையும் செய்வித்தான்.

100 பல்லக்குகள் கோட்டையிலிருந்து வெளிக்கிளம்பின. பத்மினி முதல் பல்லக்குள் இருப்பதாகவே எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அதற்குள் பத்மினியில்லை, அவளுக்குப்பதிலாக இராஜபுத்திர வீரனொருவனிருந்தான். மற்ற பல்லக்குகளிலும் தாதிகளுமில்லை. அவைகளிலும் வீரர்களே யிருந்தார்கள். ஆபரணங்களுக்குப் பதிலாக ஆயுதங்களுமிருந்தன. பல்லக்குத் தூக்கினவர்களும் போயிகளல்ல, வீரர்களே அவைகளைத் தூக்கினார்கள். எல்லாப் பல்லக்குகளையும் பத்மினி பாயின் மாமனாரான கோரா என்பவர் நடத்திக் கொண்டு அலாவுதினிற்கெதிரில் நிறுத்தி. சக்கிரவர்த்தியை நோக்கி "பத்மினி பாய் தன் கணவனைக் கடைசியாக ஒரு முறை பார்த்து விடை பெற்றுக் கொள்ள விரும்புகிறாள்" என்று சொன்னார். இராணி தமது வசமாயினளென்று ஆனந்தப் பட்டுக் கொண்டு சக்கிரவர்த்தி அந்தப்படியே உத்திரவிட்டான். முதல் பல்லக்கு பீமசிங்கு இருந்த இடத்திற்கு கொண்டுபோகப் பட்ட. அதிலிருந்த வீரன் உடனே அதிலிருந்து குதித்தான். ஆயுதங்களையும், கவ

நல்ல தருணம்! **அறிக்கை** தக்க சமயம்!!

டாரெஸ்டு பஞ்சாயத்து பிரஸிடெண்டுகளுக்கு அவசியமாக வேண்டிய கீழ்க்கண்ட ரசீது புத்தகங்கள் வெகு நேர்த்தியாகவும், சுத்தமாகவும் அச்சிட்டு, குறைந்த விலைக்கு நம்மிடம் தயாராக இருக்கின்றன.

## விவரம்.

| | | |
|---|---|---|
| 1. | குற்ற ரிபோர்ட்டு (ரூ 2) | (Offence Report) |
| 2. | மேய்ச்சல் உத்திரவுச் சீட்டு (ரூ 1) | (Cattle Permit Pass Book) |
| 3. | எருத்தழை பாஸ் (அணா 12) | (Green Leaves and Manure Pass Book) |
| 4. | உலர்ந்த சுள்ளி, குண்டுக்கல் பாஸ் (அணா 12) | (Dead wood, Quarrying etc., Pass Book) |
| 5. | பாதாந்திர ரிபோர்ட்டு 100 பாரம் (ரூ 1) | (Monthly Report 100 forms |

Note :—மேல் கண்ட (5 வது தவிர) ஒவ்வொரு புததகங்களும ஒரிஜினல், டூப்ளிகேட்டுடன் 100 ஏடுகள் நெம்பரிட்டு சுத்தமாக பயிண்டு செய்யப்பட்டுள்ளன. ஒன்றாக வாங்கினால்

இவை ஐந்தும் ரூ 5—0—0 தான்.

தபால் சார்ஜு வேறு (ரூ 1—0—0).

முன் பணம் கீழ்கண்ட விலாஸத்திற்கு அனுப்பியாவது வி. பி. (V. P.) மூலமாகவாவது பெற்றுக் கொள்ளலாம்.

Manager
The Magazine Press,
Chingl[illegible]

மானேஜர்
மாகஸீன் அச்சுக்கூடம்
செங்கற்பட்டு.

# மெயர்ஸ் பம்புகள்.

உலகப் பிரசித்தி பெற்றவை.




எவ்வளவு ஆழத்திலும் சுலபமாக

வேலை செய்யக் கூடிய கை பம்புகளும்

நிலம் பாய்ச்சவும், அதிக தண்ணீர் ஸப்ளை

செய்யவும் கூடிய பெரிய பம்புகளும்

ஜலம் தெளிக்கக் கூடிய பம்புகளும்

சுலபமாக எடுத்துக் கொண்டு போகக் கூடிய

பம்புகளும்

நம்மிடம் கிடைக்கும்.

## லிமாயீ பிரதர்ஸ் லிமிடெட்,

1-173 பிராட்வே : தபால் பெட்டி 202 : மதராஸ்.